## இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் மதியுரைச் சேவைகள் (தனியார்) கம்பனி – 2017

---

இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் மதியுரைச் சேவைகள் (தனியார்) கம்பனியின் ("கம்பனி") 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு என்னால் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதப்படும் கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புரைகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS for SME'S) ஏற்ப, தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையினது ("சபை") பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

பின்வரும் விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

(அ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தினது 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களது கைதவிர்ப்புப் பெறுமதி, சொத்துக்களது பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மான முறை என்பன வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு சீராக்கல் செய்யப்பட வேண்டுமாயினும், கம்பனியின் ரூபா 7,128,398 கிரயமுடைய நிலையான சொத்துக்கள் தொடர்பாக அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின்போது செலவிடப்பட்ட ரூபா 8,203,085 கூட்டுத் தொகை தொடர்பாகக் கொடுப்பனவு உறுதிச் சான்றுகளும் ஆதரவு நல்கும் ஆவணங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 2 ஆம் அத்தியாயத்தினது 2.36 ஆம் பிரிவின் பிரகாரம் சகல நிறுவனங்களும் சேர்ந்து நின்ற செலவின அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டும். எனினும், அதற்கு முரணாக, கம்பனியானது குத்தகை வாடகை சம்பந்தமாக (காலி முகக் கடற்கரை மைதானம்) சேர்ந்து நின்ற செலவின அடிப்படையைப் பயன்படுத்துவதற்கு பதிலாக காசு அடிப்படையைப் பின்பற்றியமையால் மீளாய்வாண்டிற்கான குத்தகை வாடகை வருமானம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,041,330 குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத்தவிர, நிதிக் கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை துறைமுகங்கள் முகாமைத்துவ மற்றும் மதியுரைச் சேவைகள் (தனியார்) கம்பனியின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடுகளும் காசுப்பாய்ச்சலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் மீதான அறிக்கை**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்.

(அ) முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரம்புக்குட்படுத்துதல் என்பன மேலே குறிப்பிடப்பட்டவாறு அமையும்.

(ஆ) இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கங்களைத் தவிர, கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பன போதியளவு பெறப்பட்டுள்ளதுடன், எனது பரிசீலனையின் மூலம் தென்படும் விதத்தில் கம்பனியானது முறையான கணக்கீட்டு அறிக்கைகளையும் ஏடுகளையும் பேணியுள்ளது என்றும்,
கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆவது பிரிவிலுள்ள தேவைகளுக்கேற்ப உள்ளனவென்பதும் எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

### 2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கையிருப்பு மீதி ரூபா 960,017 ஆகும். அத்தினத்தில் உள்ளவாறான நேரடி சரி, பிழை பார்த்தல் அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 238,376 ஆகும். நிதிக்கூற்றுக்களுக்கும் நேரடி சரி, பிழை பார்த்தல் அறிக்கைக்குமிடையே ரூபா 721,641 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கணனி (Quick Book Accounting Package) காசேட்டின் பிரகாரம் வங்கி மேலதிகப் பற்று மீதி ரூபா 5,680,645 ஆகும். காசேட்டின்படி வங்கி மேலதிகப் பற்று மீதி ரூபா 7,714,245 ஆகும். எவ்வாறாயினும், கணனி காசேட்டு மீதியின் அடிப்படையில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டமையால் காசேட்டு மீதிக்கும் வங்கி கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொண்ட மீதிக்குமிடையே ரூபா 2,033,600 வேறுபாடு அவதானிக்கப்பட்டது

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

பெற வேண்டிய நிறுத்தி வைத்த வரியாகிய ரூபா 1,701,936 சம்பந்தமாக வரிச் சான்றிதழ் ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் குறித்த மீதி சரியானதா என்பதைக் கணக்காய்வில் உறுதி செய்ய முடியாதிருந்தது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொழும்பு மாநகர சபை காலி முகத் திடலில் வாகனங்களைத் தரித்து வைப்பதற்கென துறைமுக அதிகாரசபைக்கு மாதாந்தம் ரூபா 400,000 வீதப்படி வழங்குவதற்கு எம்ஈ/டீடீஆர்எஸ்/2015 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் இணக்கம் தெரிவித்திருந்தது. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 2,000,000 மற்றும் மீளாய்வாண்டிற்கான கட்டணமான ரூபா 2,800,000 என கம்பனி இலங்கை துறைமுக அதிகார சபையிடமிருந்து பெற வேண்டிய மீதியாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. எனினும், துறைமுக அதிகார சபை அத்தொகையைக் கம்பனிக்கு மீண்டும் செலுத்துவதற்கு இணங்காததுடன், அதனைக் கம்பனி அறவிடுவதும் நிச்சயமற்றதாகி இருந்தது.

(ஆ) காலி முகத் திடல் சுற்றாடலின் வருமானமும் செலவினமும் ஒரே பேரேட்டுக் கணக்கில் குறித்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கணக்கில் ரூபா 470,545 வரவு மீதியும் இருந்தது. எவ்வாறாயினும், கம்பனி அதனை யாரிடமிருந்து அறவிடுவது என்பதை இனங்கண்டு கொண்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) துறைமுக அதிகார சபையும் கம்பனியும் 2016 செப்தெம்பர் 15 ஆந் திகதி செய்து கொண் காலி முகத் திடல் நிர்வாகப் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ உடன்படிக்கையின் 9 ஆம் பிரிவு | உடன்படிக்கைக் காலத்தின்போது ஒவ்வொரு ஆண்டும் முடிவடைந்து அதனையடுத்து வரும் சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் கம்பனியால் துறைமுக அதிகார சபைக்கு ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிச் செயற்பாடு தொடர்பான எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) 2014 பெப்ரவரி 07 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | சுற்றறிக்கைப் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் (Action Plam) தயாரிக்கப்படவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.2 ஆம் பிரிவு | பணிப்பாளர் சபை செயலாற்றல் அறிக்கைகளை அவ்வவ்போது மீளாய்வு செய்திருக்கவில்லை. |
| (ii) 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழு கூடி, உள்ளகக் கணக்காய்வினரால் கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையையும் செயற்பாட்டு நடடிவடிக்கைகளையும் முன்னேற்றுவதற்கான பரிந்துரைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், கம்பனியில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்பட்டிராததுடன், கணக்காய்வுக் குழு கூட்டங்களும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 7.4.2 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நிர்வாகம், செயற்பாட்டு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக தீர்வு காண்பதும் அவற்றிற்குத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழு காலத்துக்குக் காலம் கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், மீளாய்வாண்டின்போது மேற்படிக் குழுக் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை. |
| (iv) 7.4.5 ஆம் பிரிவு | நிறுவனத்தின் நிலையான சொத்துக்களையும் |

| | | |
|---|---|---|
| | | கையிருப்பையும் சரி, பிழை பார்ப்பதற்கான வருடாந்த பொருட் கணிப்புச் சபை நியமிக்கப்பட்டு வருடாந்த பொருட் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், நிறுவனத்தின் ரூபா 7,128,398 கிரயமுடைய நிலையான சொத்துக்களும் ரூபா 960,017 பெறுமதியுடைய கையிருப்பும் மீளாய்வாண்டின் இறுதியில் சரி, பிழை பார்க்கப்படவில்லை. |
| | (v) 9.3.1 ஆம் பிரிவு | சகல அரச தொழில் முயற்சிகளும் சகல பதவிகளுக்குமான முறையான ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு (Scheme of Recruitment) பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கத்தைப் பெற வேண்டுமாயினும், கம்பனி அவ்வாறான ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து குறிப்பிடப்பட்டவர்களது அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 மே 25 ஆந் திகதிய பீஈடீ 1/2015 சுற்றறிக்கை மற்றும் பீஈடீ 1/2015(1) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3 மற்றும் 3.3 ஆம் பிரிவுகள் | (i) சுற்றறிக்கை வரம்புகளுக்கு முரணாக 2017 ஆம் ஆண்டில் இரு உத்தியோகத்தர்களுக்கு 06 மாதங்களுக்கு ரூபா 300,000 க்கு மேற்பட்ட கூட்டுத்தொகை எரிபொருள்படி கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது.<br><br>(ii) எச்எம்1-1 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் சம்பள அளவுத் திட்டம் அமைந்துள்ள உத்தியோகத்தருக்கே பயணத்திற்கான படி வழங்கப்படலாமெனினும், அதற்கு முரணாக நிச்சயமாக இனங்காணப்படாததும் அங்கீகரிக்கப்பட்டிராததுமான முகாமைத்துவ பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2017 ஆம் ஆண்டில் பயணத்திற்கான படியாக ரூபா 240,000 வழங்கப்பட்டிருந்தது. |
| (உ) | கம்பனியின் சில்லறைக் காசுக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அறிமுகஞ் செய்யப்பட்ட நிதி நடைமுறைகளது 2.4.2(பீ) பிரிவு | சில்லறைக் காசுக் கட்டு நிதிக் கொடுப்பனவுக்கு அதற்குரிய உறுதி சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சில்லறைக் காசு கொடுப்பனவுக்கு உறுதிச் சான்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, அக்கொடுப்பனவுக்கான அங்கீகாரமும் பிழையற்ற தன்மையும் கணக்காய்வில் உறுதி செய்யப்படவில்லை. |

3. நிதிசார் மீளாய்வு
------------------------------------

3.1 நிதிப் பெறுபேறுகள்
------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 11,049,281 இலாபமாகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 12,062,371 ஆகியமையால் மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறு 8 சதவீதமான ரூபா 1,013,090 குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு
----------------------------------------------

4.1 செயலாற்றல்
---------------------------

நோக்கம்
---------------------

இலங்கை துறைமுக வளாகத்திற்கு வெளியே அமைந்துள்ள துறைமுகத்துக்குச் சொந்தமான கடல் எல்லையில் வருகை தரும் கப்பல்களைத் தரித்து வைப்பதற்கு வசதிகளை வழங்குதல், கப்பலில் இருந்து பொருட்களை இறக்கி, ஏற்றலும் இணைந்த சேவைகளை வழங்குதல், உபகரணங்களை வழங்குதல், குறித்த சந்தர்ப்பங்களில் துறைமுகத்தில் ஏற்படும் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தி முறைமைப்படுத்தல் போன்றே துறைமுக மேடை நடவடிக்கைகள், குதங்களில் நடவடிக்கைகளை நிறைவேற்றுதல், அவற்றிற்குக் கட்டணத்தை அறவிடுதல் மற்றும் அவை தொடர்பான சுற்றறிக்கைகளைப் பேணுவது தொடர்பான சகல நடவடிக்கைகள் சம்பந்தமான செயற்பாட்டு மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றல், கண்காணித்தல், கட்டுப்படுத்துதல் என்பன இலங்கை துறைமுக முகாமைத்துவம் மற்றும் மதியுரைக் கம்பனியின் பிரதான நோக்கங்களாகும்.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்
------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 ஏப்ரல் 10 ஆந் திகதியன்று கம்பனியானது 2017 ஆம் ஆண்டின் வரிக்கு முன்னரான இலாபமாக இனங்கண்டிருந்த ரூபா 18,516,768 அடிப்படையாகக் கொள்ளப்பட்டு ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 74,042 வீதம் ரூபா 956,436 மிகையூதியமாக வழங்கப்பட்டிருந்தது. எனினும், 2018 ஒக்டோபர் 16 ஆந் திகதி கம்பனி சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 10,297,402 ஆகியமையால் மிகையூதியத்தை வழங்குவதில் நிலவிய பிழையற்ற தன்மை கணக்காய்வில் கேள்விக்குரியதாகியது.

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை துறைமுக அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டிட நவீனமயப்படுத்தல் செலவினமாகிய ரூபா 5,901,323 மற்றும் இழப்பீட்டுத் தொகையாகிய ரூபா 1,013,472 என்பவற்றைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திராததுடன், 2018 யூலை 04 ஆந் திகதிய எஸ்எல்பீஎம்சீ/21/2018 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் மேற்படி தொகைக்கு 100 சதவீத ஐயக்கடன் நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(இ) கம்பனிக்கு எதிரான 2 வழக்குகள் தொடர்பாகப் போதிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை.

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 24/2011 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விசேட நிலைமையின் கீழ் 06 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதி தவிர 60 வயதைக் கடந்த ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களைத் தொடர்ந்து சேவையில் அமர்த்த முடியாது. எனினும், 2018 யூலை 30 இல் உள்ளவாறு துறைமுக அதிகார சபையில் பணியாற்றிய 09 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் துறைமுக முகாமைத்துவ மற்றும் மதியுரைக் கம்பனியினூடாக மீண்டும் துறைமுக அதிகாரசபையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். இதில் 8 உத்தியோகத்தர்கள் ஆரம்பத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு ஆம்சேர்க்கப்பட்டு பின்னர் 1 முதல் 11 ஆண்டுகளாக சேவை நீடிப்புக்குள்ளாகியிருந்தனர். இவ்வாறு 2017 ஆம் ஆண்டில் பணியிலமர்த்தப்பட்ட 7 பேருக்கு கம்பனிக்கூடாக சம்பளமும் படியுமாக ஆண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொகை ரூபா 4,664,168 ஆகும்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் ஆண்டறிக்கையின் வரைவுடன் நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், கம்பனியின் 2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையின் வரைவும் நிதிக்கூற்றுக்களும் 2018 ஒக்டோபர் 16 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 5.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டுமாயினும் கம்பனியானது மீளாய்வாண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்திற்கும் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கும் ஏற்றவாறு வரவு, செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலும் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) மனிதவள முகாமைத்துவம் | ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படாமை |
| (ஆ) உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அமைக்கப்படாமை மற்றும் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்திற்கேற்றவாறு உள்ளகக் கணக்காய்வு நடைபெறாமை. |
| (இ) கையிருப்புக் கட்டுப்பாடு | கையிருப்பு அறிக்கைகளைப் பேணுதல் கிரமமற்றவாறு இருத்தல் |
| (ஈ) பெற வேண்டிய மீதி | பெற வேண்டிய மீதியை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்காமை |